அ.வ.எண்: 104/2014 நாள்: 12.03.2026

வா.சா.4 – சுதாகரன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை:**

1.சர்வே எண் 95/3 மற்றும் சர்வே எண் 104/1 ஆகியவை வருவாய் கணக்குகளில் என்ன வகைப்பாடாக உள்ளது என்றால், இரண்டு சர்வே எண்களும் நஞ்சை நிலமாக உள்ளது. பொதுவாக நஞ்சை நிலங்கள் என்றால் விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள் அடுத்தடுத்து உள்ளனவா என்றால் சரிதான். மேற்படி நஞ்சை நிலங்களுக்கு அருகே தாவா வழக்கின் வாதிக்கு பாத்தியப்பட்ட மற்ற நஞ்சை நிலங்களும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு சர்வே எண்களும் வாதியால் 21.12.1959–ஆம் தேதி அன்று கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்று என்னுடைய விசாரணையில் நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1959 ஆம் ஆண்டிற்கு பிறகு மேற்படி சர்வே எண்களுக்கு பட்டா எண். 320 யார் பெயரில் ஏற்பட்டது என்றால், என்னிடம் 1984 ஆண்டு முதலான ஆவணங்கள் தான் உள்ளது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க, சாட்சி உரிய

ஆவணங்கள் கொண்டு வராததால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.12 16:21:55 +0530